2

இலக்கிய மீளாய்வின் முக்கியத்துவமும் ஆய்வு இடைவெளியின் வகைகளும்

(Importance of Review of Literature and Types of Research Gaps)

கலாநிதி க.ஞானரெத்தினம்

அறிமுகம்

ஓர் ஆய்வாளன் ஆய்வுப் பிரச்சினை ஒன்றை தேர்ந்தெடுத்ததைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய முதற்பணி இலக்கிய மீளாய்வு செய்வதாகும். சமூக விஞ்ஞான ஆய்வொன்றில் இலக்கிய மீளாய்வானது ஆய்வு தொடர்பான பல்வேறு விளக்கங்களைத் தரக்கூடியது. இது சார்பிலக்கிய மீளாய்வு மற்றும் விடயத்தேடல் எனவும் அழைக்கப்படுகின்றது. முக்கியமாக ஓர் ஆய்வின் தராதரங்களாகிய முகத்தகுதி, உள்ளடக்கத் தகுதி மற்றும் முன்னறி தகுதி

என்பனவற்றைப் பேணுவதில் இதன் செல்வாக்கு மிக அதிகமாகும்.

ஓர் ஆய்வாளன் எங்கு இருக்கின்றார், அவர் எங்கு - எப்படிச் செல்ல வேண்டும் என்பதனை இலக்கிய மீளாய்வு தெளிவுப்படுத்துகின்றது. அத்துடன் குறித்த ஓர் ஆய்வின் ஆய்வுப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட ஆய்வு நோக்கங்கள், ஆய்வு வினாக்கள் மற்றும் கருதுகோள்களை வரையறை செய்தல் உட்பட மாதிரிகளைத் தெரிவு செய்தல், தரவு சேகரிப்புக் கருவிகளைத் தீர்மானித்தல், பகுப்பாய்வு நுட்பங்களை இனங்காணல் என்பவை தொடர்பாகவும் தெளிவான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் இலக்கிய மீளாய்வு வழிகாட்டுகின்றது.

அனைத்திற்கும் மேலாக ஆய்வாளர்கள் கடந்த காலத்தில் எத்தகைய ஆய்வுகளைச் செய்துள்ளார்கள்?, அவர்கள் எத்தகைய முடிவுகளை முன்வைத்துள்ளார்கள்?, எதிர்கால ஆய்வாளர்களுக்காக அவர்கள் விட்டுச் சென்ற பணிகள் என்ன? போன்ற பல்வேறு வினாக்களுக்கு இலக்கிய மீளாய்வு செய்வதினுடாக விடைதேட முடிகின்றது. "இலக்கிய மீளாய்வு" என்பதற்கான ஆய்வாளர்களின் சில வரைவிலக்கணங்கள் மேலும் இதன் முக்கியத்தை தெளிவுபடுத்துகின்றன.

இலக்கிய மீளாய்வானது ஓர் ஆய்வின் முக்கியமான படிநிலையாகக் கொள்ளப்படுகின்றது. ஆய்வுக்கான அறிமுறைக் கோட்பாட்டுச் சட்டகமொன்றை உருவாக்குவதற்கு இது மிகவும் உறுதுணையாக அமைகிறது. வரலாற்றியல் ஆய்வில் தகவல்களைத் திரட்டும் ஓர் உத்தியாகவும் இது அமைகின்றது. ஆய்வுத் தலைப்பு ஒன்றைத் தேர்ந்தெடுத்ததைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணி இலக்கிய மீளாய்வு ஆகும். இலக்கிய மீளாய்வே ஆய்வுத் தலைப்பினைச் செம்மையாக்கிய நிலைமைகளும் நிறைய உண்டு (சின்னத்தம்பி, 2025).

ஓர் ஆராய்ச்சியை, ஏற்கனவே அது பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளோடும், அது பற்றிய சிந்தனைகளோடும் தொடர்புபடுத்தி ஆராய்வதே விடயத் தேடல் அல்லது இலக்கிய மீளாய்வு எனப்படுகின்றது. இவ்வழியைப் பின்பற்றுவதாயின் நாம் தெரிவு செய்த பிரச்சினை தொடர்பாக வெளிவந்த ஆராய்ச்சிகள், நூல்கள், கட்டுரைகள், வேறு எழுத்தாக்கங்கள் என்பனவற்றை வாசித்து மீளாய்வு செய்தல் வேண்டும் (Leedy & Ormrod, 2005).

பிரச்சினையைச் சரியாக இனங்காண்பதற்கும், அதனைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும், ஏற்கனவே அது பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எவை என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், தெரிவு செய்த பிரச்சினை பற்றி

எமது ஆரம்பக் கருத்துக்களை மறுசீரமைத்துக் கொள்வதற்கும், ஏனைய ஆராய்ச்சியாளர்கள் கையாண்ட ஆய்வு முறைகளை அறிந்து கொள்வதற்கும், குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே கொண்டுள்ள அறிவைத் தொகுத்து நோக்குவதற்கும் இலக்கிய மீளாய்வு செய்வது இன்றியமையாததாகும் (Iivari, Hirschheim & Klein, 2004).

ஓர் ஆராய்ச்சியானது தனியொரு நபராலோ அல்லது ஒரு குழுவாலோ மேற் கொள்ளப்படுகின்றது. எந்தவொரு ஆராய்ச்சியும் ஏற்கனவே அந்த விடயம் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் தங்கியிருக்கும். அது மட்டுமல்ல அந்த விடயம் பற்றிய எதிர்கால ஆராய்ச்சிக்கு ஓர் அடிப்படையாகவும் அமைய முடியும். உறுதியாக அடித்தளமிடப்பட்டுள்ள முன்னைய அறிவைப் புதிதாக அபிவிருத்தி செய்வது இலக்கிய மீளாய்வு ஆகும். இது எப்பரப்பில் ஆய்வு செய்யப்படவேண்டும், எவ் ஆய்வுகள் மேலும் விரிவு செய்யப்பட வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டும் (Webster & Watson ,2002).

விளைதிறனான இலக்கிய மீளாய்வு என்பதற்கு பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரு தலைப்பு தொடர்பான பிரத்தியேக அணுகு முறையை பரிட்சிப்பதற்கான திட்டத்தை தரக்கூடியதும் ஆய்வு முறையைத் தெரிவு செய்வதற்கும்

நடைமுறைப்படுத்துவதற்கும் புதிய பங்களிப்பு செய்யக்கூடியது விளைதிறனான இலக்கிய மீளாய்வு ஆகும் (Shaw,1995).

இத்தகைய வரைவிலக்கணங்களில் இருந்து ஆய்வு நடைமுறையில் இலக்கிய மீளாய்வு பல பயன்பாடுகளைக் கொண்டுள்ளது என்பதனை மேலும் அறிய முடிகின்றது. விசேடமாக ஓர் ஆய்வாளன் தனது ஆய்வின் முக்கியத்துவத்தையும் தேவையையும் உறுதியாக வெளிப்படுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் அவசியமானதாகக் கருதப்படுகின்ற “ஆய்வு இடைவெளி” (Research Gap) பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கிய மீளாய்வானது பெரும் பங்களிப்பு வழங்குகின்றது.

ஆய்வு இடைவெளி என்பதன் கருத்து:

ஆய்வு இடைவெளி என்பது, ஒரு குறிப்பிட்ட துறையில் அல்லது தலைப்பில் இதுவரை போதுமான அளவு ஆராயப்படாத, தீர்க்கப்படாத அல்லது விவாதிக்கப்படாத ஒரு சிக்கல், பிரச்சினை அல்லது அறிவுக் குறைபாடு ஆகும். இதனை தற்போதுள்ள அறிவுத் தளத்தில் உள்ள ஒரு “வெற்றிடம்” என்றும் குறிப்பிடலாம்.

ஓர் ஆய்வாளன் ஆய்வொன்றைத் தொடங்குவதற்கு முன்னர் இந்த ஆய்வு இடைவெளியைக் கண்டறிவது முதன்மையானதும் மிகவும் அவசியமானதுமாகும்.

ஏனெனில், இந்த இடைவெளியை நிரப்புவதே அவ் ஆய்வாளனின் பிரதான நோக்கம் மற்றும் தனித்துவமான பங்களிப்பாக இருக்கும். பின்வரும் வரைவிலக்கணங்கள் இதனை மேலும் தெளிவுபடுத்துகின்றன.

ஆய்வு இடைவெளி என்பது அனுபவ ரீதியான முடிவை எடுக்க போதுமான அல்லது விடுபட்ட தகவல்கள் இல்லாத ஒரு பிரச்சினையாக இருக்கலாம் (Snilstveit et al.,2016).

ஆய்வு இடைவெளி பற்றிய தகவல்கள் ஆராய்ச்சியின் வெற்றிக்கு மிகவும் முக்கியமானவை, ஆய்வாளர்கள், நிதி வழங்குபவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆராய்ச்சியைத் தொடங்க நிச்சயமற்ற பகுதிகளைப் புரிந்துகொள்ள இதைப் பயன்படுத்துகின்றனர் (Robinson et al., 2011).

ஆய்வு இடைவெளி என்பது ஆராய்ச்சியால் போதுமான அளவு கவனிக்கப்படாத ஒரு பிரச்சினையாகும். ஆய்வுக்கான வாதத்தை ஆதரிக்க போதுமான அனுபவ ஆதாரங்கள் இல்லாததாலும், இலக்கிய வெற்றிடத்தாலும் இது ஏற்படலாம், இது ஆய்வு இலக்கியத்தில் தொலைந்து போன அல்லது முடிக்கப்படாத தரவு ஆகும், இது இன்னும் ஆராயப்படவில்லை அல்லது முயற்சிக்கப்படவில்லை (Robinson et al., 2011).

ஆய்வு இடைவெளியை அடையாளம் காண்பதன் முக்கியத்துவம்:

- புதிய அறிவை உருவாக்குதல் :
  ஏற்கனவே கண்டறியப்பட்டதை மீண்டும் செய்யாமல், ஆய்வுத் துறைக்கு புதிய மற்றும் அசல் தகவலைச் சேர்க்க இது உதவுகிறது.
- ஆய்வின் பொருத்தப்பாடு :
  குறித்த ஆய்வானது தேவையானதா ? மற்றும் காலத்திற்குப் பொருத்தமானதா? என்பதை உறுதிப்படுத்துகிறது.
- பிரச்சினைக்கான தீர்வுக்கு உதவுதல் :
  சமூகத்தில் நிலவும் தீர்க்கப்படாத அல்லது முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாத ஒரு பிரச்சினைக்கான தீர்வுகளைக் கண்டறிய ஆய்வை வழிநடத்துகிறது.
- எதிர்கால ஆய்வுக்கான திசை :
  இந்த இடைவெளிகள், மற்றய ஆய்வாளர்கள் எதிர்காலத்தில் எந்தத் திசையில் தங்கள் ஆய்வைத் தொடர வேண்டும் என்பதற்கான பரிந்துரைகளை வழங்குகின்றன

ஆய்வு இடைவெளியின் வகைகள்:

ஆய்வு இடைவெளிகளை வரையறுப்பதற்கான கட்டமைப்பை உருவாக்கிய முதல் அறியப்பட்ட கட்டுரை Robinson, Saldanhea, & McKoy (2011) ஆகியோரால் எழுதப்பட்டது எனக் Anthony Miles (2017) என்பவர் குறிப்பிடுகின்றார். அதன் பின்னர் Miles (2017) என்பவர் ஏழு முக்கிய ஆய்வு இடைவெளி வகைகளைக் கொண்ட ஒரு புதிய மாதிரியை முன்மொழிந்தார் எனவும் அவை சான்றாதார இடைவெளி, அறிவு இடைவெளி, நடைமுறை - அறிவு முரண்பாட்டு இடைவெளி, முறையியல் இடைவெளி, அனுபவ இடைவெளி, தத்துவார்த்த இடைவெளி அல்லது கோட்பாட்டு இடைவெளி மற்றும் குடித்தொகை இடைவெளி என்பனவாகும் எனவும் Anthony Miles (2017) குறிப்பிடுகின்றார். கருதப்பட்ட ஏழு ஆய்வு இடைவெளிகள் பற்றி சுருக்கமாக இங்கு ஆராயப்படுகின்றன.

சான்றாதார இடைவெளி (Evidence Gap)

சான்றாதார இடைவெளி என்பது, ஒரு குறிப்பிட்ட ஆய்வு வினாவுக்கு அல்லது பிரச்சினைக்கு பதிலளிக்கத் தேவையான நம்பகமான மற்றும் உயர்தரமான ஆய்வுத் தரவு இல்லாத நிலையைக் குறிக்கிறது. ஆய்வு இடைவெளி வகைகளில் இது மிகவும் பொதுவான ஒன்றாகும்.

அதாவது, ஒரு குறிப்பிட்ட துறையில் முடிவெடுக்கவோ, கொள்கைகளை வகுக்கவோ அல்லது ஒரு செயல்முறையை சிறப்பாகப் புரிந்து கொள்ளவோ போதுமான ஆதாரங்கள் (ஆய்வுகள், தரவுகள்) இல்லை என்பதாகும்.

1. சான்றாதார இடைவெளியின் முக்கியத்துவம்

- முடிவெடுப்பதில் உள்ள சிரமம் :
  சான்றுகள் இல்லாததால், நிபுணர்கள் அல்லது கொள்கை வகுப்பாளர்கள் தங்கள் முடிவுகளை ஊகங்கள் அல்லது குறைந்த தரமான தகவல்களின் அடிப்படையில் எடுக்க நேரிடும்.
- ஆராய்ச்சியின் திசை :
  இந்த இடைவெளிகள், எதிர்கால ஆய்வுக்கான முக்கியப் பகுதிகளை அடையாளம் காண உதவுகின்றன. ஒரு இடைவெளி அறியப்படும்போது, அதுவே புதிய ஆய்வுகளுக்கு ஒரு தேவையாக அமைகிறது.

2. அறிவு இடைவெளி (Knowledge Gap)

அறிவு இடைவெளி என்பது, ஒரு குறிப்பிட்ட ஆய்வுப் பிரச்சினை அல்லது கருப்பொருளைப் பற்றி ஓர் ஆய்வாளன் எதுவும் அறியாத அல்லது மிகக் குறைவாக அறியும் நிலையைக் குறிக்கிறது.

அதாவது, ஒரு குறிப்பிட்ட புலத்தில் எவ்விதமான அடிப்படை ஆய்வுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை அல்லது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகக் குறைவாகவோ, பழையதாகவோ, அல்லது நம்பகத்தன்மையற்றதாகவோ இருக்கின்றன என்பதாகும். இதனால், ஒரு பிரச்சினையைப் பற்றிய புரிதல், வரையறை, மற்றும் அதன் தாக்கம் பற்றிய அடிப்படைத் தகவல்கள் கூட இல்லாத நிலை நிலவுகிறது எனலாம்.

சான்றாதார இடைவெளிக்கும் அறிவு இடைவெளிக்குமிடையே குழப்பமான நிலையும் உள்ளது. சான்றாதார இடைவெளியில் ஆய்வுப் பொருள் குறித்து அடிப்படை புரிதலே இல்லை. ஆயினும் அறிவு இடைவெளியில் ஆய்வுப் பொருள் குறித்து சில புரிதல்கள் உள்ளபோதிலும் உயர்தரமான, இறுதி முடிவுக்குத் தேவையான சான்றுகள் இல்லை எனலாம்.

3. நடைமுறை - அறிவு முரண்பாட்டு இடைவெளி (Practical-Knowledge Conflict Gap)

சமூக விஞ்ஞான ஆய்வுகளில் காணப்படும் முக்கியமான ஆய்வு இடைவெளிகளில் ஒன்று நடைமுறை - அறிவு முரண்பாட்டு இடைவெளி ஆகும். இது சில சமயங்களில் நடைமுறை முரண்பாட்டு இடைவெளி எனவும் அழைக்கப்படுகிறது.

இந்த இடைவெளி, ஏற்கனவே நிறுவப்பட்ட, சிறந்ததாகக் கருதப்படும் ஆய்வு முடிவுகளுக்கும் (அறிவு), உண்மையான உலகில் அன்றாடம் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கும் இடையில் ஒரு முரண்பாடு அல்லது வேறுபாடு நிலவும் போது உருவாகிறது. இந்த முரண்பாடு பெரும்பாலும் சூழல் சார்ந்த தடைகள் , பண்பாடு மற்றும் நம்பிக்கை மற்றும் அறிவை அணுக முடியாத நிலை போன்ற காரணிகளால் ஏற்படலாம்.

உதாரணமாக, ஆய்வு முடிவுகள் ஒரு வழிமுறையை "சிறந்தது" என்று பரிந்துரைக்கப்படும் போது நடைமுறையில் உள்ள சூழல் காரணமாக, மக்கள் அல்லது அமைப்புகள் அந்த வழியைப் பின்பற்ற முடியாமல் வேறு வழியைப் பின்பற்றுகிறார்கள் என்பதனைக் குறிப்பிடலாம்.

4. முறையியல் இடைவெளி (Methodological Gap)

முறையியல் இடைவெளி என்பது, தற்போதுள்ள ஆய்வுப் பிரச்சினைக்கு போதுமான அல்லது திருப்திகரமான தீர்வுகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆய்வு வடிவம், ஆய்வு அணுகுமுறை, மாதிரிகளின் அளவு, மாதிரித் தெரிவு நுட்பங்கள், ஆய்வுக்கருவிகள் மற்றும் தரவு பகுப்பாய்வு நுட்பங்கள் திருப்திகரமாக அல்லது போதுமானதாக இல்லை என்று கருதப்படும்போது எழும் ஓர் ஆய்வு இடைவெளியாகும்.

அதாவது, ஒரு துறையில் கோட்பாட்டு இடைவெளி (Theoretical Gap) இல்லாவிட்டாலும் கூட, அந்த கோட்பாட்டை சோதிக்கவோ அல்லது ஆழமாகப் புரிந்துகொள்ளவோ பயன்படும் முறையில் உள்ள பலவீனம் அல்லது குறைபாடு ஆகும்.

முறையியல் இடைவெளியை அடையாளம் காண்பதன் முக்கிய நோக்கம், ஏற்கனவே உள்ள ஆய்வுகளின் நம்பகத்தன்மையை மறுபரிசீலனை செய்வது மட்டுமல்லாமல், ஆய்வு முடிவுகளின் செல்லுபடித்தன்மையை (Validity) மேம்படுத்தும் புதிய, அதிக துல்லியமான மற்றும் பலமான ஆய்வு முறைகளை அறிமுகப்படுத்துவதாகும்.

முறையியல் இடைவெளி உருவாகுவதற்கு பின்வரும் சர்ந்தப்பங்களில் வாய்ப்பு அதிகமாகும்.

- ஆய்வு வடிவம் மற்றும் ஆய்வு அணுகுமுறை பொருந்தாமல் இருத்தல்
- அதிகமான ஆய்வு வரையறைகளை முன்வைத்தல்
- மாதிரிகளின் அளவு மிகச்சிறிதாக இருத்தல்
- ஓரே மாதிரியான தரவு சேகரிப்பு கருவிகளைப் பயன்படுத்தல் (முக்கோணப் படுத்தாமை)
- எளிய தரவுப்பகுப்பாய்வு நுடபங்களைப் பயன்படுத்தல்

5. அனுபவ இடைவெளி (Empirical Gap)

அனுபவ இடைவெளி என்பது, ஒரு குறிப்பிட்ட கோட்பாடு அல்லது கருத்தாக்கம் (Concept) ஏற்கனவே இருந்தாலும், அதனை நிரூபிக்க, சோதிக்க அல்லது அதன் செயற்பாட்டை நிஜ வாழ்க்கைத் தரவுகளுடன் (Empirical Data) உறுதிப்படுத்த போதுமான அல்லது நம்பகமான தரவு இல்லாதபோது ஏற்படும் வெற்றிடத்தைக் குறிக்கிறது. அதாவது, ஒரு துறையைப் பற்றி ஓர் ஆய்வாளன் தனக்குத் தெரிந்தது என்று தான் நினைக்கும் விடயத்திற்கும், அந்த விடயத்தை தரவு அடிப்படையிலான ஆதாரங்களுடன் நிரூபிக்கக் கூடிய அவரது திறனுக்கும் இடையிலான இடைவெளியாகும்.

உதாரணமாக, ஒருவரது மனப்பாங்கு, நாட்டம், இயல்பு மற்றும் நடத்தை போன்றவை தொடர்பாக ஓர் ஆய்வை மேற்கொள்ள வேண்டிய சர்ந்தப்பங்களில் பெரும்பாலான ஆய்வுகள் குறிப்பிட்டவரை குறுக்கு வெட்டு முறையில் (Cross-sectional) மட்டுமே அளவிடுகின்றன (ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் தரவு சேகரித்தல்). இது ஒரு பாரிய ஆய்வு இடைவெளியாகும். இந்த இடைவெளியை தவிர்பதற்கு ஆய்வாளர்கள் குறிப்பிப்பிட்டவரை பல வாரங்கள் அல்லது மாதங்களுக்குத் தொடர்ந்து கண்காணிக்கும் நீண்ட கால ஆய்வுகளை (Longitudinal Studies) நடாத்துதல் வேண்டும்.

6. தத்துவார்த்த இடைவெளி அல்லது கோட்பாட்டு இடைவெளி (Theoretical Gap)

தத்துவார்த்த இடைவெளி என்பது, ஒரு குறிப்பிட்ட சமூக நிகழ்வை விளக்கவோ, புரிந்துகொள்ளவோ அல்லது கணிக்கவோ போதுமான கோட்பாட்டு கட்டமைப்பு (Theoretical Framework) இல்லாதபோது அல்லது தற்போதுள்ள கோட்பாடுகள் முரண்படும் போது (Contradict) ஏற்படும் இடைவெளியைக் குறிக்கிறது.

அதாவது, ஒரு நிகழ்வு ஏன் நடக்கிறது என்பதை விவரிக்கவோ அல்லது இரண்டு மாறிகளுக்கு இடையேயான தொடர்பை எவ்வாறு விளக்குவது என்று தெரியாமல் இருக்கும்போதும் இந்த இடைவெளி ஏற்படுகிறது.

7. குடித்தொகை இடைவெளி (Population Gap)

குடித்தொகை இடைவெளி என்பது, ஒரு குறிப்பிட்ட ஆய்வு ஒரு குறிப்பிட்ட குடித்தொகை குழுவை மட்டுமே பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதன் முடிவுகள் வேறுபட்ட குழுக்களுக்குப் பொதுமைப்படுத்தப்படவில்லை (Generalizable) அல்லது ஆய்வு செய்யப்படவில்லை என்று கருதப்படும்போது ஏற்படும் இடைவெளி இது குறிக்கிறது.

அதாவது, ஆய்வு முடிவுகள் ஒரு குறிப்பிட்ட இனக்குழு, புவியியல் இடம், வயதுக் குழு அல்லது சமூகப் பொருளாதாரப் பின்னணிக்கு மட்டுமே பொருத்தமாக இருக்கும் சர்ந்தப்பங்களில் கருதப்படாத மற்றய குழுக்களுக்குப் பொருந்தாது என்ற சந்தேகத்தைக் குறிக்கிறது.

சாராம்சம்

கல்விப்புலம் சார் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆய்வு இன்றியமையாதது. இதன் காரணமாக ஆசிரியர் மற்றும் கல்வியியலாளர்கள் "ஆய்வாளர்" என்ற வகிபாகத்தை எடுக்க வேண்டியவராகின்றார். முக்கியமாக பாடசாலைகளில் பல்வேறு இயல்புகளையும் தேவைகளையும் கொண்ட வேறுபட்ட வயதுக்குழுவினர்கள் இருப்பதன் காரணமாக அங்கு பல பிரச்சினைகள் தோன்றுவதற்கு வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. இதனால் இப்பிரச்சினைகளுக்கான காரணங்கள் மற்றும் பின்னணியை விஞ்ஞான ரீதியில் அறிந்து பொருத்தமான ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுகளை முன்வைக்க வேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர் உட்பட கல்வியியலாளர் அனைவருக்கும் உண்டு. எந்தவொரு ஆய்வாளரினாலும் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் தராதரம் மற்றும் உண்மைத் தன்மை உயர்நிலையில்

அங்கீகரிக்கப்படுவதற்கு அவ் ஆய்வுகளில் “ஆய்வு இடைவெளி” என்ற அம்சம் கருதப்படவேண்டியது இன்றியமையாதது ஆகும். சமகாலத்தில் அதிகமான ஆய்வாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறுபட்ட சமூக விஞ்ஞான ஆய்வுகளில் “ஆய்வு இடைவெளி” என்ற முக்கியமான அம்சம் பெரும்பாலும் கருதப்படாமல் இருப்பதனையும் அத்துடன் பல ஆய்வாளர்கள் இது தொடர்பான தெளிவான விளக்கம் இன்றி ஆய்வு செய்வதனையும் அறிய முடிகின்றது. இத்தகைய இடைவெளியை இவ் ஆக்கம் நிரப்புவதற்கு வழிகாட்டும் என்பது கட்டுரையாளரின் எதிர்பார்ப்பாகும்.

உசாத்துணைகள்

சின்னத்தம்பி,க.(2025).*கல்வி ஆய்வு.* சேமமடு புத்தகசாலை.

Anthony Miles,D,(2017). *Research Methods and Strategies Workshop: A Taxonomy of Research Gaps: Identifying and Defining the Seven Research Gaps*.

https://www.researchgate.net/publication/319244623

Iivari, J., Hirschheim, R. and Klein, H.K. (2004) 'Towards a distinctive body of knowledge for informationsystems experts: Coding ISD process knowledge in two IS journals', Information Systems Journal,14(4), 313-342

Leedy, P.D. and Ormrod, J.E. (2005) 'Practical research: Planning and design (8th ed.)', Upper SaddleRiver

Shaw, J. (1995) 'A schema approach to the formal literature review in engineering theses', System, 23(3),325-335

Webster, J. and Watson, R.T. (2002) 'Analyzing the past to prepare for the future: Writing a literature review', MISQuarterly, 26(2), 13-23 [Preprint]. Wilkins, J.L.M. (2008) 'The relationship among elementary teachers' content knowledge, attitudes, beliefs, and practices', Journal of Mathematics Teacher Education, 11(2), pp. 139–164. Available at: https://doi.org/10.1007/s10857 007-9068-2.